

(தமிழ்நாடு கூட்டுறவுச் சிப்பந்திகள் சங்க மாத வெளியீடு.)

சந்தா விகிதம்.	ஆசிரியர்	விளம்பர விகிதம்
ஒரு வருடம் ரூ. 2	கே. சீனிவாசன்,	தேவை விளம்பரம் ரூ. 2
6 மாதம் ரூ. 1.	எம். ஏ.,	இதர விளம்பரம்.
தனிப்பிரதி அணா 3.		கால் பக்கம் ரூ. 3.
		முழுப் பக்கம் ரூ. 10.

மலர் 1. | DECEMBER 1949. | இதழ் 3.

கூட்டுறவுச் செய்திகள். Co-operative News.

லக்ஷ்மணபுரியில் கூடிய ஆசிய தூரகிழக்கு கூட்டுறவு மகாநாடு 11 நாட்கள் நடவடிக்கைகளுக்குப்பின் 2-11-49ல் முடிவுற்றது. மகாநாட்டில் கிழக்காசிய சர்க்கார்கள் கூட்டுறவு இயக்கத்தை மக்களிடம் பரப்புவதில் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளவேண்டுமென்றும், ஏற்கனவே நாணயம், ஸ்டோர், விற்பனை வேலைகளைத் திறம்படச் செய்துவரும் கிராம கூட்டுறவுச்சங்கங்கள், சுகாதாரம், வயது வந்தோர் கல்வி, பொது விளையாட்டு போன்ற க்ஷேமாபிவிருத்தி வேலைகளைச் செய்ய சர்க்காரால் உதவி செய்யப்படவேண்டுமென்றும், சிபார்சு செய்யப்பட்டது. தவிர நாட்டின் நலம் கருதி மீன் பிடித்தல், கிராமக் கைத்தொழில்கள், விவசாயம் இவைகளைக் கூட்டுறவு முறையில் நடத்த சம்பந்தப்பட்ட சர்க்கார்கள் அக்கறை கொள்ளவேண்டுமென்றும் மகாநாடு சிபார்சு செய்தது. 2—11—49.

★ ★ ★

தஞ்சை ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கி மகாசபை 13-11-49 மாலை 3-மணிக்குக் கூடியது. ஸ்ரீ O. A. நாருயணஸ்வாமி அய்யர் உபதலைவர் அக்ராசனம் வகித்தார். தஞ்சை ஜில்லா டிப்டி ரிஜிஸ்திரார் ஸ்ரீ பூபால் ராயர் கூட்டத்திற்கு வந்திருந்தார். தனி நபர்கள் மிகக் குறைவாகவும், சங்க பிரதிநிதிகள் அதிகமாகவும் வந்திருந்தனர். பாங்கி பைலா 19ல் சிப்பந்திகள் சங்கம் சம்பந்தமான சில திருத்தங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன. 1948-49 ஆடிட் ரிப்போர்டு வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. நிகர லாபம் ரூ. 29539—13—0ல் வாராக்கடன்கள் நிதிக்கு ரூ.10000ம் போக, பாக்கி ரூ.19539-13-0ல் இருந்து க்ஷேம நிதிக்கு ரூ. 9846—10—0ம், பங்குகள்மேல் டிவிடெண்டு 3% வீதம் ரூ. 7600—0—0ம் பொதுநல பண்டுக்கு ரூ.500ம் டிவிடெண்டு சமம் செய்யும் நிதிக்கு ரூ .1593-3-0லாபமாக பிரிவினை செய்யப்பட்டது. பின்பு 1949—50 வருஷ பட்ஜட் அங்கீகரிக்கப்பட்டது. சமீபத்தில் சம்பளங்கள் உயர்த்தப்பட்டதால் இந்த வருஷ பட்ஜட்டில் போனஸ் என்ற அதிக சம்பளம் எதுவும் சேர்க்கப்படவில்லையென்று கூறப்பட்டது.

கிராம சீரமைப்புத் திட்டத்தையும் அதிக உணவு திட்டத்தையும் நன்கு நிறைவேற்றுவதில் எல்லா சங்கங்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று ஸ்ரீ மூலங்குடி கோபாலகிருஷ்ணய்யர் அவர்களும், ஸ்ரீ S. சுயம்பிரகாசம் அவர்களும் கூறி, கூட்டத்திற்கு வந்திருந்த டெலிகேட்டுகளுக்கும் அதிகாரிகளுக்கும் வந்தனோபசாரம் கூறினார்கள். எல்லோருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டபின் கூட்டம் இனிது கலைந்தது. 13—11—49.

* * *

கூடலூர் கூட்டுறவு பால் சப்ளை யூனியனின் பால் கறவை ஸ்தலம் ஒன்று பூண்டியன்குப்பம் கிராமத்தில் ஸ்ரீ பி. ஆர். ஸ்ரீனிவாச படையாச்சி எம். எல். ஏ, ஜில்லா போர்டு தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அதுசமயம், சங்க பால்பண்ணை நிபுணர் ஸ்ரீ அகோபில சாஸ்திரி, கால்நடைகள் எப்படி பராமரிக்கப்படவேண்டுமென்று பேசினார். பால் சப்ளை யூனியன் காரியதரிசி வந்திருந்தவர்களுக்கு வந்தனோபசாரம் கூறினார். 18—11—49.

* * *

சென்னை மத்திய நில அடமான பாங்கி டைரக்டர்கள், ரிசர்வ் பாங்கி கவர்னர் சர். பெனிகால் ராமராவ் அவர்களுக்கு ஒரு உபசரிப்பு அளித்தனர். விருந்தினரை வரவேற்று பாங்கி தலைவர் பி. வெங்கடரத்னம், ரிசர்வ் பாங்கி இதுவரை இயக்கத்திற்குப் பலவகையில் உதவியுள்ளதென்றும் முக்கியமாக பிற்காலத்தில் நில அபிவிருத்திக்கான

கடன்களை மிகக்குறைந்த வட்டிக்குக் கொடுத்துதவவேண்டும். தவிர கூடிய சீக்கிரம் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை மிகப்பரந்த அளவில் அமலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினார். உபசரிப்புக்குப்பதிலளித்த சர் ராமராவ் அவர்கள் தாம் ரிசர்வ் பாங்கி கவர்னராயிருக்கும் வரையில் கூட்டுறவு நிச்சயம் நன்கு கவனிக்கப்படுமென்றும், இயக்கம் தென்னாட்டு மக்களிடையே மிகச் சிறந்த சேவை செய்துள்ளது என்றும், பிற்காலத்தில் அது இன்னும் சிறந்த வகையில் சேவை செய்ய தன்னாலானதையெல்லாம் செய்வதாயும் உறுதி கூறினார். 19—11—49.

*　　　*　　　*

திருப்பத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் சிங்கம்பூனேரி கிட்டங்கியின் அஸ்திவாரக்கல் மாகாண ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் ராவ் சாகிப் A. பழனியப்ப முதலியார் அவர்களால் நாட்டப்பட்டது. அஸ்திவாரக்கல்லை நிறுவியபின் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் கிட்டங்கி செலவு ரூ. 15000ல் பாதியும் சர்க்கார் கொடுக்குமென்றும், பிற்காலத்தில் நாணயத்தைவிட விற்பனை போன்ற நாணயப்பற்றற்ற நடவடிக்கைகளே பெருகவேண்டும் என்றும் அதற்காக சர்க்கார் பல வகைகளிலும் உதவுவர் என்றும் கூறினார் சங்கக் காரியதரிசி ஸ்ரீ A. ராமச்சந்திரம் பிள்ளை கூடியிருந்த எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறினார். 20—11—49.

*　　　*　　　*

20 & 21-11-49 தேதிகளில் 15வது ஆந்திர மாகாண கூட்டுறவாளர் மகாநாடு அனந்தபூரில் L. R. தசரதராம ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. 700க்கதிகமான சங்க பிரதிநிதிகள் மகா நாட்டிற்கு வந்திருந்தனர். மகாநாட்டில் கூட்டுறவுக்கொடி, கனம் ஜாயிண்டு ரெஜிஸ்திரார் ஸ்ரீ K. சுப்பிரமணிய நாயுடு அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டது. மகாநாடு வரவேற்பு தலைவர் பி. ராமாசார்லு கூட்டுறவு இயக்கம் மிகப் பரவியிருந்தபோதிலும் உண்மையில் அது எதிர்பார்த்தபடி ஏழைமக்களுக்கு நிவாரணம் அளிக்கத் தவறிவிட்டது. சுரண்டலை ஒழிக்க தனி நபர் லேவாதேவி சட்ட பூர்வமாகத் தடுக்கப்படவேண்டும் என்று கூறினார். மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ தசரதராம ரெட்டியார் தற்சமயம் உணவு மிக முக்யமான பிரச்னையாக உள்ளது. அதிக உணவு உற்பத்தியை உறுதிசெய்ய கூட்டுறவுப் பண்ணை முறை கட்டாயமாக்கப்படவேண்டும் என்று கூறினார். மகாநாடு மறுநாள் கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றியபின் கலைந்தது.

கூட்டுறவுச் சங்கங்களும், ஊழியர்களும் இதைப்போன்ற தகவல்களை எழுதி அனுப்பும்படி கோரப்படுகிறார்கள். — ஆசிரியர்.]

வேலையும் கூலியும். Work & Wages.

(இயக்கத்தில் வேலை செய்து வரும் சிப்பந்திகள் அனுப்பித்தரும் வேலைநிலை-ஊதியம் பற்றிய தகவல்கள், கூட்டுறவு நிர்வாகஸ்தர்கள் அவைகளைக் கவனித்து பரிகரிக்கவேண்டியே பிரசுரிக்கப்படுகின்றன. ஆகவே, சங்க நிர்வாகஸ்தர்கள் பரிகாரம்பற்றிய தகவல்களை அனுப்பிக் கொடுத்தால் அவைகளும் உடனுக்குடன் சந்தோஷத்துடன் பிரசுரிக்கப்படும்.)—ஆசிரியர்.

* * *

திருச்சி அர்பன் கோவாபரேடிவ் ஸ்டோரில் தற்சமயம் கீழ்க்கண்டபடி சம்பள விகிதங்கள் இருந்துவருகின்றன.

உத்தியோகம்	சம்பளம்	பஞ்சப்படி
மானேஜர் — சர்க்கார் சீனியர் இன்ஸ்பெக்டர் அமர்த்தப்பட்டுள்ளார்		
கணக்கர்	40—2—60	12
குமாஸ்தா	30—2—40	12
டிப்போ மானேஜர்	30—2½-50	12
சேல்ஸ் மென்	20—2—30	10
,, உதவி	15—1—20	10
பாக்கர் & பியுன்	10—1—15	10
வாட்ச் மேன்	9—1—12	10

பஞ்சப்படி ரூ 12ம், 10ம், கொடுக்கப்படுகிறது. வீட்டு வாடகைப் படி கிடையாது. நிரந்தரமான சிப்பந்திகளுக்கு பிராவிடெண்டு பண்டுக்கு சம்பளத்தில் ரூ 1க்கு 0—1—4 பிடிக்கப்படுகிறது. எல்லா சிப்பந்திகளுக்கும் ஒரு மாத சம்பளத்திற்கு குறையாமல் போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் மேற்படி சம்பளங்களைச் சாதகமாகத் திருத்தியமைக்க திட்டங்களிருந்து வருவதாகக் கேள்வி.

இது 11—49ல்.

* * *

உறையூர் தேவாங்க கைத்தறி நெசவாளர் சங்கத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருந்தும் காரியதரிசி ஸ்தானம் இலாகா, சீனியர் இன்ஸ்பெக்டரால் வகித்துவரப்படுகிறது. கணக்கர் சம்பளம் ரூ. 34—8—0, செக்கர் ரூ. 45, சேல்ஸ்மென் ஒருவர் ரூ. 32—8—0, மற்றவர் ரு. 45, மற்ற 2 குமாஸ்தாக்கள் சம்பளம் ரூ. 45. அட்டெண்டர் சம்பளம் ரூ. 25. எல்லா சிப்பந்திகளுக்கும் ஸ்கேல் இருந்தும் இரண்டு வருஷங்களாக இன்கிரிமெண்டு கொடுக்கப்படவில்லை. வேலையில் காயமான சிப்பந்திகளுக்குமட்டும் பிராவிடெண்டு பண்டு உண்டு. பஞ்சப்படி ரூ. 16, வீட்டுவாடகை அலவன்ஸ் எதுவும் கிடையாது. சமீபத்தில் சில ஊழியர்களுக்கு ஆள் குறைவு திட்டப்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் சங்கம் நஷ்டத்தில் வேலைசெய்யவில்லை.—இது 11—49ல்.

இராமநாதபுரம் ஜில்லா மத்திய பாங்கியில் குமாஸ்தா சம்பளம் ரூ. 40-2-60-3-90 சூபர்வைசர்களுக்கு தனி அலவன்ஸ் ரூ.10 அதிகம் உண்டு. பிரயாணப்படி மாதம் ரூ. 15. எல்லோருக்கும் பஞ்சப்படி ரூ. 30 கொடுக்கப்பட்டு வருகிறது. பாங்கி சிப்பந்திகள் வெளி ஸ்தாபனங்களில் வேலைசெய்ய அனுப்பப்பட்டால் சம்பளத்தில் 25% கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது. எல்லா நிரந்தரமான சிப்பந்திகளுக்கும் பிராவிடெண்டு நிதி, லீவு வசதிகள் உண்டு. சிப்பந்திகளுக்கு தொடர்ந்து சில வருஷங்களாக ஒரு மாத போனஸ் (அதிக சம்பளம்) கொடுக்கப்பட்டு வருகிறது. இது 11—49ல்

*　　　*　　　*

வல்லம் கூட்டுறவு ஸ்டோரில் தற்சமயம் மானேஜர் சம்பளம் ரூ. 35-2-50. பஞ்சப்படி ரூ. 20, வீட்டு வாடகை அலவன்ஸ் ரூ 5, தவிர பாங்கி சூபர்வைசர், மானேஜராக வேலை பார்த்துவருவதற்காக அவருக்கு சம்பளத்தில் 25% கூடுதலும் அளிக்கப்படுகிறது. சேல்ஸ் மென்களுக்கு ரூ. 25 முதல் 35 வரையிலும், அட்டெண்டர்களுக்கு 15முதல் 25 வரையிலும் வாட்சுமானுக்கு ரூ. 15 முதல் 20 வரையிலும் சம்பளம் கொடுக்கப்பட்டுவருகிறது. சிப்பந்திகளுக்கு வருடத்திற்கு ஒரு மாத சம்பளம் போனசாக கொடுக்கப்பட்டு வருகிறது. காசுவல் லீவ் மாதத்திற்கு 2 நாளும், சிக் லீவ் மாதத்திற்கு ஒரு நாளும் உண்டு. சிப்பந்திகளுக்கு பிராவிடெண்டு நிதி ஏற்படுத்துவது பற்றிய திட்டம் பரிசிலனையில் இருந்து வருகிறது. அதிக வேலைக்கு ஓவர்டைம் சம்பளம் உண்டு. இந்த தகவல்கள் ஷை ஸ்டோர் 19-11-49ல் எழுதியுள்ள கடிதத்திலிருந்து பிரசுரிக்கப்படுகின்றன.

*　　　*　　　*

காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய பாங்கியில் தற்சமயம் சூபர்வைசர்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் சம்பளம் ரூ. 40—2—60—1½—75. கூட்டுறவுப் பயிற்சியில் தேறி பாங்கியின் சர்வீஸ் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் எல்லோரும் உத்தியோகத்தில் காயம் செய்யப்படுகிறார்கள். ஷை பாங்கி காரியதரிசி எழுதியுள்ள இந்த தகவல்கள் சந்தோஷத்துடன் பிரசுரிக்கப்படுகின்றன. **ஆசிரியர்.**

கூட்டுறவுச் செய்திகள். (3-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பூர் கூட்டுறவு சங்கத்தின் 28வது ஆண்டு மகா சபை மீட்டிங் 23-11-49ல் நடைபெற்றது. 1948-49 வேலை அறிக்கை வாசிக்கப்பட்டு சங்க ஆடிட் ரிபோர்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. சங்கத்தின் நிகர லாபம் ரூ. 18276—11—0லிருந்து பங்குதாரர்களுக்கு வருடம் 6¼% வீதம் டிவிடெண்டும், காரியதரிசிக்கு சன்மானமாக ரூ. 1200ம் அனுமதிக்கப்பட்டது.

சில அறிவிப்புகள். Some Notifications.

ஹோட்டல்களில் ஹரிஜனங்கள் உரிமை.

பெரியகுளத்திலுள்ள ஒரு ஹோட்டல்காரர் ஹரிஜனங்களை ஹோட்டலுக்குள் விட மறுத்ததற்காக, தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் அவர்கள் எதிரிகள் இருவரையும் குற்றவாளிகள் எனத் தீர்மானித்து தலா ரூ 50 அபராதம் விதித்தார். 1—11—49.

* * *

சர்க்கார் தேவைகளுக்கு கதர்.

சர்க்கார் இலாக்காக்கள் கதர் துணிகளையே உபயோகிக்கவேண்டுமென்றும், அதிகாரிகளும் தங்கள் உத்தியோக உடுப்பை கதரில் செய்துகொள்ளவேண்டும் என்றும் சென்னை சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர். 5—11—49

* * *

நெசவுத்தொழிலுக்கு மத்திய சர்க்கார் உதவி.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஏற்பட்டிருக்கும் மந்தத்தைப் போக்கக்கருதி மத்திய சர்க்கார் மாகாண உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கான சுமார் நாற்பதுலட்சம் ரூபாய் பெறுமான கைத்தறி நெசவு ஜவுளியை நமது மாகாணத்திலிருந்து வாங்கிக்கொள்ள இசைந்துள்ளது. தவிர நமது மாகாணத்திற்கு வெளியிலிருந்துவரும் மில் ஜவுளிகளை கைத்தறி நெசவுடன் போட்டி செய்யாத வகையில் தேவைக்குத் தகுந்தபடி பொறுக்கி வாங்கலாம் என்றும் அனுமதித்துள்ளது.

இன்னும், சமீபத்தில் பம்பாயில் கூடிய மில் முதலாளிகள், கைத்தறி நெசவு போர்டார் கோரிக்கைப்படி சில ஜவுளி ரகங்களை கைத்தறிகளே உற்பத்தி செய்யும்படி விட்டு விடுவதென்று ஒப்புக்கொண்டு தீர்மானித்துள்ளனர். 7—11—49.

[மேற்கூறிய நடவடிக்கைகளின் பயனாக கைத்தறி ஜவுளி மந்தம் நீங்கி கூட்டுறவு நெசவுச் சங்கங்கள் நன்னிலை எய்துமென்று நம்பப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மறுபடியும் மந்தம் நேரிடாமல் இருப்பதற்காக கூடியமட்டும் ஜனங்கள் விரும்பும் ரகங்களை உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்வது அவசியம் —**ஆசிரியர்.**]

* * *

உணவு விலை குறையும்.

1949௵ டிசம்பர்மீ 4உ முதல் உணவு தானிய விலைகளைச் சற்று குறைக்க சென்னை சர்க்கார் தீர்மானித்துள்ளனர். தானியக் கொள்முதல் விலை மணங்கு 1க்கு அணா 3 முதல் 4வரை குறைக்கப்படும். தவிர அனேக மில்கள், மொத்த வியாபாரிகள் லாப மார்ஜினிலிருந்தும் சிறிது குறைக்கப்பட்டு, தானியம் வாங்குபவர்களுக்கு $6\frac{1}{4}$% விகிதமாவது குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9—11—49.

பிர்க்கா அபிவிருத்திதிட்ட விஸ்தரிப்பு,

பிர்க்கா அபிவிருத்தி திட்டத்தை ஒவ்வொரு ஜில்லாவிலும் மேற்கொண்டு இரண்டு பிர்க்காக்களில் விஸ்தரிக்கும்படி சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர். மேற்படி தகவல்களை சட்டசபையில் அறிவித்த மந்திரி ஸ்ரீ பரமேஸ்வரன், பிர்க்கா அபிவிருத்தி திட்டம் நடத்தப்பட்டவரை நல்ல பலனைத்தந்திருப்பதால் அந்த திட்டத்தின் விஸ்தரிப்பு தீர்மானிக்கப்பட்டதென்று கூறினர். 8—11—49.

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் பதவி;

பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் பதவிகாலத்தை 1—2—1950 வரை நீடித்து சென்னை சர்க்கார் உத்திரவு விட்டுள்ளனர். 7—11—49

நீதி-நிர்வாகப் பிரிவினை விஸ்தரிப்பு.

சென்னை சர்க்கார் பரீக்ஷார்த்தமாகச் செய்த நீதி-நிர்வாகப் பிரிவினை நன்கு வேலைசெய்து வருவதாயும், எவரும் திட்டத்தைக் கடுமையாக ஆக்ஷேபிக்கவில்லையென்றும், திட்டம் மேற்கொண்டு பல்லாரி, அனந்தபூர், சித்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் அமுல் செய்யப்படுமென்றும் கனம் மந்திரி மாதவமேனன் சட்ட சபையில் தெரிவித்துள்ளார். 9—11—49.

சர்க்கார் சிப்பந்திகள்-விதிகள் திருத்தம்.

சென்னை, சர்க்கார், கவர்ன்மெண்டு சிப்பந்திகள் விதிகளில்

(1) இனி சர்க்கார் சிப்பந்திகள் சில்லரைப் பரிசுகள்கூட பெறக்கூடாதென்றும்,

(2) சர்க்கார் முன் உத்திரவின்றி சொத்துக்கள் வாங்கக்கூடாதென்றும்

(3) சர்க்கார் சிப்பந்திகள் சர்க்கார் கொள்கைகளைக் கண்டித்துப் பேசக்கூடாதென்றும், அப்படிச்செய்யும் கூட்டம், பத்திரிகைகளில் அவர்கள் கலந்துகொள்ளக்கூடாதென்றும் திருத்தம் செய்து கெஜட்டில் பிரசுரித்துள்ளனர். 11—11—49.

அகில இந்திய விவசாயப் பொருளாதார மகாநாடு.

ஷை மகாநாடு 1949 டிசம்பர் 30, 31 தேதிகளிலும், 1950 ஜனவரி மாதம் 1 தேதியிலும் சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெறும். மகாநாட்டிற்கு பாபு ராஜேந்திரபிரசாத் தலைமை வகிப்பார். மகாநாட்டை நன்கு நடத்திவைக்க சென்னை நிதிமந்திரி ஸ்ரீ B. கோபால்ரெட்டியார் தலைமையில் ஒரு உபசரணைக்கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. காரியதரிசிகள் ஸ்ரீ பி. நடராஜன் & எம். பாபிநீடு. பொக்கிஷதார் ஸ்ரீ வி. எஸ் தியாகராஜ முதலியார். உபசரணைக்கமிட்டி அங்கத்தினர்கள் கட்டணம் ரூ. 25.

சர்வதேச கூட்டுறவாளர் தினம்
5—11—49 சனிக்கிழமை.

27வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் தமிழ்நாடெங்கும் கூட்டுற வாளர்களால் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு உலக சமாதானத்திற்கும், பொருளாதார சுபிக்ஷத்திற்கும் கூட்டுறவே சிறந்த சாதனம் என்பதை எடுத்துக்காட்டி தீர்மானங்களும் செய்யப்பட்டன.

தஞ்சை. ஷை தினம் ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக மாணவர்களால் ஸ்பெஷல் டெவலப்மெண்டு ஆபீசர் ஸ்ரீ S. ராமச்சந்திர முதலியார் அவர்கள் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. S. சுயம் பிரகாசம் அவர்கள் கூட்டுறவென்பது மக்கள், மக்களுக்குச் செய்யவேண்டிய அடிப்படையான கடமையென்றும் அதை மறப்பது சுயநலமென்றும், கூட்டுறவு சமுக முன்னேற்றத்திற்கு மூச்சைப்போல் அமைந்துள்ளதால் யாவரும் அதைப் போற்றி கடைப் பிடிக்கவேண்டுமென்றும் கூறினர். பயிற்சிக் கழக ஆசிரியர் ஸ்ரீ P. சீனிவாசன் வந்தனோபசாரம் கூறினர்.

கூடலூர். H. S. பால் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஜில்லா பாங்கு, அர்பன் பாங்கு, ஸ்டோர் அங்கத்தினர் சிப்பந்திகள், ஸ்தல டிப்டி ரிஜிஸ்திரார் முதலியவர்கள் விழாவில் கலந்து கொண்டனர். ஜில்லா பாங்கி காரியதரிசி ஸ்ரீ T. R. தரணிதரன், விழாவிற்கு வந்தவர்களை வரவேற்ருர் ஸ்ரீ C. திருநாவுக்கரசு, டிப்டி ரிஜிஸ்திரார் அவர்கள் கூட்டுறவாளர் தினம் கொண்டாடப்படுவதின் நோக்கத்தை விளக்கினர்.

சேலம். சர்வதேச கூட்டுறவாளர் தினம் மத்திய பாங்கி கட்டிடத்தில் சேலம் சிடி-ஸ்டோர்ஸ் தலைவர் ராவசாகிப், S. துரைசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. டவுனில் உள்ள பல கூட்டுறவு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். ஜனுப் மகமத் அப்துல் அஜீஸ் சாகிப், டெவலெப்மெண்டு ஆபீசர், சர்வதேச கூட்டுறவு தினத்தின் முக்கியம் பற்றிப் பேசினர். திரு வி. ராமலிங்கம் வந்தனோபசாரம் கூறினர்.

திருச்சி. சர்வதேச கூட்டுறவாளர் தினம் கூட்டுறவு மத்திய பாங்கார் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. திருச்சி அர்பன் ஸ்டோர் காரியதரிசி பேராசிரியர் A. ஹிருதயசாமி ரெட்டியார் எம்.ஏ.பி எல். தலைமை வகித்தார். ஜில்லா பாங்கி காரியதரிசி ஸ்ரீ G. வரதராஜன் அவர்கள் இதுவரை ஜில்லாவிலுள்ள கிராமங்களில் பாதிக்குமேல் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்துள்ளன என்றும், ஆனல் அவைகளின் வேலை பல துறைகளிலும் விஸ்தரிக்கப்படவேண்டியுள்ளதென்றும், அந்த வேலையில் உதவ ஒவ்வொருவரும் இந்த தினத்தில் தீர்மானித்

கூட்டுறவால் நாட்டுயர்வு.

கூட்டுறவுத் தொண்டு.

டிசம்பர் 5—1949.

கிராம நாணய கூட்டுறவுச் சங்கங்களும் க்ஷேமாபிவிருத்தி வேலைகளும்.

கிராம நாணய கூட்டுறவுச்சங்கங்கள் முதன் முதலில் எளிய விவசாயிகளுக்குச் சிறிய கடன் தொகைகளை நியாயமான வட்டிக்குக் கொடுத்து உதவ மட்டுமே நிறுவப்பட்டன. 1912ம் வருஷத்திய 2வது சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கனம், சுயஉதவி, பரஸ்பர சகாயம் இவைகளை அங்கத்தினர்களிடையே எல்லா வகைகளிலும் பெருக்குவது அவசியம் என்று கருதி நாணயமல்லாத உற்பத்தி, விற்பனை சங்கங்கள் ஏற்படுத்துவதை அனுமதித்தது. 1932ம் வருஷத்திய (சென்னை) VI-வது சட்டத்தில்தான் கூட்டுறவு சங்கங்கள், நல்ல உற்பத்தி, நல்ல வியாபாரம் தவிர, நல்வாழ்க்கையையும் பெருக்கப்பாடுபடவேண்டுமென்று கூறப்பட்டது.

மேற்படி திருத்தத்திற்கு இணங்க கூட்டுறவுச் சங்கங்களின் 2வது நிபந்தனையில் காணப்பட்ட நோக்கங்களும் விஸ்தரிக்கப்பட்டன: 1930க்குமுன் இருந்த ஆறு லக்ஷியங்கள் தற்சமயம் 12க்கும் அதிகமாகிவிட்டன. என்றாலும் 1946க்குப்பின்னர் மதுவிலக்கு திட்டம் ஏற்பட்டதன் பயனாகத்தான் கூட்டுறவு சங்கங்கள் கிராம க்ஷேமாபிவிருத்தி வேலைகளில் தீவிரமான பங்கு எடுத்துக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளன. இந்த வேலையில் சங்கங்களுக்குச் சகல உதவிகளும் புரியும் பொருட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஸ்பெஷல் டெவலெப்மெண்டு அதிகாரியும் அநேக கிராம க்ஷேமாபிவிருத்தி உத்யோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரிகள் எவ்வளவுபேர் நியமிக்கப்பட்டாலும், பொது ஜனங்களும், இயக்கத்தில் ஏற்கனவே வேலை செய்துவரும் பல சூபர்வைசர்களும் மனப்பூர்வமாகவும் உற்சாகத்துடனும் ஒத்துழைத்தால் மட்டுமே, சர்க்கார் மேற்கொண்டுள்ள திட்டங்கள் குறித்த காலத்திற்குள் வெற்றிகரமாக நிறைவேறும். அவ்விதம், திட்டம் கூடிய சீக்கிரம் நிறைவேறுவது மாகாண ஜனங்களின் க்ஷேமத்திற்கு மிகவும் அவசியமாயுமுள்ளது. ஆகவே எல்லா உத்யோகப்பற்றில்லாத கூட்டுறவு

ஊழியர்களையும் சர்க்காரின் க்ஷேமாபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதில் அதிகாரிகளுடன் முழுமனதுடன் ஒத்துழைக்கும்படி 'தொண்டு' வேண்டிக்கொள்கிறது அதே சமயத்தில் அதிகாரிகள் உத்தியோகப்பற்றில்லாத கூட்டுறவு ஊழியர்களை எல்லாவகைகளிலும் கண்ணியமாக நடத்தி, தாங்கள் அவர்களை நாட்டுத் தொண்டாற்றும் ஊழியர்களாக மதிப்பதாக அவர்களைப்பலவழிகளிலும் உணரச்செய்வது அவசியமாயிருக்கிறதென்பதையும் வற்புறுத்த விரும்புகிறது.

இந்த ஆண்டுக்குள்ளாக 50 சத விகிதத்திற்கதிகமான கிராமங்கள் கூட்டுறவு கிராம சங்கவேலை-எல்லைக்குள் சேர்க்கப்பட்டுவிட்டன என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆனாலும் அதைவிட முக்கியமானது,அந்த எல்லைகளுக்குள் உள்ளவர்களை சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து கடன் பெறுதல், மகசூலை விற்றல் முதலிய சவுகரியங்களை அடையச் செய்வது. இந்த வேலை திறம்பட நடக்க சூபர்வைசர்களும், பஞ்சாயத்தார்களும் தினசரி நெருங்கி, ஒத்துழைக்க வேண்டும். இந்த லக்ஷியத்தை சுலபமாக நிறைவேற்றவும், கிராமத்தில் சிக்கனத்தைப் பெருக்கவும் பைலா 16படி ஏலச்சீட்டு நடத்த ஏற்பாடு செய்வது மிகவும் முக்கியம். சீட்டிற்குக் கட்ட பணம் சேர்க்கவேண்டி மெம்பர்களுக்கு உண்டிப் பெட்டிகள் வழங்கப்படலாம். சங்கத்தில் மாதாமாதமும் சீட்டுகளின் ஏலத்தைப் பார்க்கக் கூடும் மெம்பர்களைக்கொண்டு, மகா சபைகள் நடத்தி பிரசாரம் செய்யலாம்.

சங்கம் நடத்தும் ஏலச் சீட்டில் பெண்களும் சேர அனுமதிக்கப்படுவது முக்கியம். அவர்களுக்கு அது கறவை மாடு வாங்கவும் பால் விற்கும் பணத்தைச் சேமித்து வைக்கவும் மிகவும் உபயோகமாயிருக்கும். சீட்டு ஏலத்தில் எடுக்க முடியாத நபர்களுக்குத் தேவையான கடன் தொகைகளை சங்கம் உடனுக்குடனே கடனாக கொடுக்கும் வகையால் சங்கத்தின் லேவாதேவியைப் பெருக்கலாம். தவிர சீட்டுத் தொகையை சேமிக்க விரும்புபவர்களை, சீட்டுத்தொகையை சொசைட்டியில் நல்ல வட்டிக்கு பிக்சட் டிபாசிட்டாகப் போடும்படிச் சொல்லலாம்.

அடுத்தபடியாக By-law 2Bபடி ஒரு ஸ்டோர் பிரிவு ஏற்படுத்தி கிராம அங்கத்தினர்களுக்கு உதவலாம். இந்த ஸ்டோர் திறமையாக நடக்கப் போதுமான பங்குத்தொகை சேர்க்கப்படுவது முக்கியம். அதைவிட முக்கியமாய் மெம்பர்கள் யாவரும் எல்லா நிலைமையிலும் சங்கஸ்டோரை, தங்கள் சொந்தமான கடையென்று உணர்ந்து அதிலேயே தங்கள் தேவைகளை வாங்கிக் கொள்ளும்படிச்செய்வது முக்கியம். சாமான்கள் வாங்கும் விஷயத்தில் பெண்களுக்கே அதிக

செல்வாக்கு இருந்துவருவதால் கூட்டுறவுச்சங்கம் அதிகமான பெண்களை அங்கத்தினர்களாகச் சேர்த்து, கறவைக்கடன்கள் கொடுத்தும், சீட்டுகள் நடத்தியும், பாலை அடுத்துள்ள நகரத்திற்குக் கொண்டு போய் விற்க ஏற்பாடு செய்தும் உதவினால் பெண்கள் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களையும், மாடுகளுக்குத் தேவையான பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு சாமான்களையும், விஸ்வாசமாக வாங்கி சங்க ஸ்டோரை ஆதரிப்பார்கள் என்பது நிச்சயம்.

சாதாரணக்கடன்கள் கொடுப்பது தவிர, இந்த இரண்டு திட்டங்களையும் ஒவ்வொரு சங்கமும் இன்னும் ஒரு ஆண்டு அளவிற்குள் செய்யும்படிக்கான சகல உதவிகளையும் சூபர்வைசர்கள் சங்கங்களுக்குச் செய்து அதன் பலனைக் கவனிக்கும்படிக் கோரப்படுகிறார்கள்.

1. இந்த திட்டம் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டால்

சங்கத்தில் மகாசபைக்கூட்டம் மாதா மாதமும் ஏல சமயத்தில் கூட வகையேற்படும்.

2. மெம்பர்கள் துகைகளை சேமித்துவைக்கவும், தங்களுக்குள் ஒத்தாசை செய்துகொள்ளவும் வகையேற்படும்.

3. கடன் வாங்க விரும்பாத மெம்பர்களும், கறவை மாடுகள் உள்ள:பெண்களும்கூட சீட்டில் கலந்துகொள்வதற்காக சங்கத்தில் சேருவார்கள். சங்கம் பலம்பெறும்.

4 கிராமத்தில் உற்பத்தியாகும் பாலை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதால் அநேக குடும்பங்கள் பிழைக்கவழியுண்டாகும். கிராமங்களிலும் பால் உற்பத்தியும், கால் நடைகளும் பெருகும்.

மேற்சொன்ன இரண்டு திட்டங்களையும் :ஒரு சங்கம், வருட காலத்திற்குள் நன்கு நிறைவேற்றினால் அதை ஒரு சிறந்த சாதனையாகவே கருதலாம். — 'கூட்டுறவு வாழ்க''

நில அடமான பாங்கிகளுக்கு ரூ. 5½ கோடி கடன் வசதி

சென்னை மத்திய நில அடமான பாங்கிகளுக்கு ரூ. 5½கோடி வரை நில அடமான கடன் பத்திரங்கள் வெளியிடும்படி அனுமதித்து சென்னை சட்டசபை சட்டமியற்றியுள்ளது. சட்ட சபை மெம்பர்கள் பலரும் ஷை சட்டத்தை ஆதரிக்கையில் நில அடமான பாங்கிகள் செய்துவரும் சிறந்த சேவைகளைப் பாராட்டினர். நில அடமான பாங்கிகள் முன்னிலும் தாராளமாகச் சிறிய குடியானவர்களுக்கு புஞ்சை நிலங்கள் மீதும் கடன்கள் கொடுக்க முன்வரவேண்டும் என்றும் சிலர் கூறினர்.

சர்வதேச கூட்டுறவாளர் தினம். (8-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்ளவேண்டுமென்றும் கூறினார். பண்டிதர் நடேசன் அவர்கள் பேசியபிறகு தலைவர் தமது முடிவுரையில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி நாட்டின் க்ஷேமத்திற்கு மிக அவசியம். உற்பத்தி, விற்பனை இரண்டும் கூட்டுறவு ரீதியில் கவனிக்கப்படவேண்டும். உணவு விலை கண்டிரோல் இருப்பதால் விவசாயிகள் லாபமான கரும்பு, மஞ்சள் போன்றவைகளைப் பயிர் செய்கிறார்கள். கண்டிரோல் எடுபட்டால் தானிய உற்பத்தி அவசியத்திற்கேற்றபடி செய்யப்பட்டு நாட்டில் சுபிக்ஷம் நிலவும் என்று கூறினார். ஸ்ரீ S. K. வேலாயுதம், பாங்கி எக்சிகூடிவ் ஆபீசர், வந்தனோபசாரம் கூறினார்.

வேலூர். ஷை தினம் ஜில்லாக் கலெக்டர் ஸ்ரீ A. துரைராஜ் அவர்கள் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ P. S. ராஜகோபாலன் அவர்கள் சர்வதேச கூட்டுறவாளர் தினம் கொண்டாடப்படுவதின் முக்கியம்பற்றி விரிவாகப் பேசினார். வேலூர் நகர கூட்டுறவாளர்கள் பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கோவை. ஷை தினம் ஸ்ரீ G. D. நாயுடு அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கூட்டுறவு சம்மேளனத்தாரால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது கூட்டத்தில் கலந்துகொண்ட ஸ்ரீ T. A. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், நாட்டில்சிதறுண்டுகிடக்கும்பண்ணைகள் சீர்படுத்தப்பட்டு விவசாயம் சிறந்த முறையில் நடத்தப்பட்டால்தான் உற்பத்தி உயர்ந்து உணவுப்பஞ்சம் தீருமென்றும், அப்படிச் செய்வதற்கு கூட்டுறவு முறைதான் சிறந்தது என்றும், அதை கூட்டுறவாளர்களும் பொதுமக்களும் கூடியசீக்கிரம் உணர்வது அவசியமென்றும் கூறினார். தவிர பொருளாதார சமாதானத்திற்கும் நியாயத்திற்கும் அவசியமான உற்பத்தியாளருக்கும் உபயோகிப்பவர்களுக்கும் இடையே நியாயமான தொடர்பை கூட்டுறவு திட்டங்களினால்தான் ஏற்படுத்தமுடியுமென்றும் கூறினார். தலைவர் G. D. நாயுடு அவர்கள் ஸ்ரீமான் செட்டியார் கூறியதுபோல் கூட்டுறவு ஒரு சிறந்த சாதனமானாலும் அதை நாம், மேனாட்டிலிருந்து அப்படியே எடுத்துக் கொள்ளாமல் நாட்டின்தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும், ஜப்பான் ஸ்விட்சர்லாந்து போன்ற தேசங்களிலிருந்து நாம் அநேக பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியுள்ளதென்றும் கூறினார்.

ஷை தினம் தமிழ் நாட்டில் மற்றும் பல ஊர்களிலும் முன்வருஷங்களைவிட இவ்வருஷம் விமரிசையாக கொண்டாடப்பட்டிருப்பது இயக்கத்திற்கு ஒரு சுப சகுனமாகும்.—**ஆசிரியர்.**

தபால்பெட்டி. Letters to Editor.

[ஒரு திருநெல்வேலி கூட்டுறவு ஊழியர் எழுதுகிறார்]

ஷாப் சட்டமும்—கூட்டுறவுச் சங்கங்களும்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஷாப் சட்டத்திலிருந்து பூரண விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களில் வேலைசெய்துவரும் சிப்பந்திகள் ஷாப்பு சட்டத்திலுள்ள பல வசதிகளை ஏற்கனவே அனுபவித்து வருகிறார்கள் என்று காரணம் காட்டப்படுகிறது. ஜில்லா பாங்குகள், அர்பன் பாங்குகள் மற்றும் சில சங்கங்களில் சிப்பந்திகளுக்கென்று சில விதிகளை வகுத்து பின்பற்றிவருகிறார்கள். மற்ற ஸ்தாபனங்களில் வேலைபார்க்கும் எண்ணற்ற சிப்பந்திகள் வேலைக்கு உத்திரவாதம், லீவு போன்ற வசதிகள்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

ஷாப்பு சட்டத்தில் கண்டுள்ள, அன்றாட வேலைசெய்யும் மணி நேரங்களை நிர்ணயித்தல், விடுமுறைகள் சுகாதார வசதிகள், அபராதங்கள் விதிப்பது. திடீரென்று வேலையிலிருந்து தள்ளிவிடுவதிலிருந்து பாதுகாப்பு, அப்பீல் செய்துகொள்வதுபோன்ற முக்கிய அம்சங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் மிகவும்பொருந்தும்.

முதலில் வேலை நேரத்தை எடுத்துக்கொள்வோம். கூட்டுறவு பண்டகசாலைகள், நெசவாளர் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்கள் சாதாரண மற்ற கடைகள் மாதிரி அன்றாட வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. பெரும்பான்மையான கூட்டுறவு சங்கங்கள் வியாபார ஸ்தலங்களில் கிளைகளைத் திறந்து வியாபாரம் செய்கிறார்கள். அந்தந்த வியாபார ஸ்தலங்களிலுள்ள வேலை நேரத்தை அனுசரிப்பதுதான் சிப்பந்திகளுக்கும் பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். வேலை நேரத்திலிருந்து விதிவிலக்களித்தால், ஒரு தெருவிலுள்ள கூட்டுறவு ஸ்டோர் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் திறந்துவைக்கலாமென்று இருந்தால் அனுவசியமாக மற்ற கடைகளுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் போட்டி ஏற்பட்டு விபரீதமான விளைவுகளுக்கு இலக்காக நேரிடும்.

விடுமுறைகள் சிப்பந்திகளுக்கு மிகமிக அவசியமென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. சுகாதார முறைகள் அனுசரிக்கவேண்டியதற்காகக் கண்டுள்ள ஷரத்துக்கள் பொதுப்படையானவை. கூட்டுறவுச் சங்க கட்டிடங்களை சுத்தமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் இருப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்பதில் அர்த்தமில்லை

திடீரென்று வேலையிலிருந்து நீக்குவதிலிருந்து பாதுகாப்பும், அப்பீல் செய்துகொள்வதற்குள்ள வசதியும் சிப்பந்திகளின் ஜீவாதார உரிமைகள். சில கூட்டுறவு ஸ்தாபனங்களின் உப விதிகள்படி சிப்பந்திகளை நீக்குவதற்குள்ள அதிகாரியே அப்பீல் அதிகாரியுமாக இருக்கிறார். அநேகமாக சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்குவதற்குள்ள அதிகாரம் அந்தந்த ஸ்தாபனத்தின் நிர்வாக கமிட்டியிடம் இருந்து வருகிறது. அப்பீல் அதிகாரமும் அந்த நிர்வாகக் கமிட்டியிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சங்கமும் தனி யூனிட்டாக இருப்பதினால் அப்பீல் அதிகாரத்தை வேறொருவரிடம் ஒப்புவிக்க வழி இல்லை என்று வாதாடலாம். அதற்காக சிப்பந்திகளின் உரிமைகளைப் பரிக்க இடம் கொடுக்க முடியாது. எந்தக் கண் கொண்டு இந்தப் பிரச்னையை ஆராய்ச்சி செய்தாலும் சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்குவதற்கும், அப்பீலை கவனிப்பதற்கும் உள்ள அதிகாரம் ஒரே ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதென்பது ஒருபோதும் பொருந்தாது.

ஷாப்பு சட்டப்படி லேபர் கமிஷனருக்கு அப்பீல் செய்து கொள்ள வசதியிருக்கிறது. இந்த சலுகையை விட்டுக்கொடுப்பது முடியாது.

ஆகையால் கூட்டுறவு சங்கங்களுக்கு ஷாப்பு சட்டத்திலிருந்து விதிவிலக்களித்தால் சிப்பந்திகளின் நலன்கள் வெகுவாகப் பாதிக்கப்படுமென்பதை சென்னை அரசாங்கத்தார் உணர்வார்களா!

இந்தியப் பிரதமரின் 61வது ஜென்மதின விழா

14—11—49, சனிக்கிழமை.

பாரத நாட்டின் ஒப்பற்ற திலகமும், மகாத்மா காந்தியடிகளின் ராஜீய வாரிசும், கூட்டுறவு இயக்கத்தின் சிறந்த நண்பரும், உலக சமாதான தூதருமான பண்டித ஜவஹர்லால் நேருஜியின் 61வது ஜென்ம தினம் 14-11-49ல் தமிழ்நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

மேற்படியார் இன்னும் பல ஆண்டுகள் திடகாத்திரமாக ஜீவித்திருந்து நாட்டுமக்களுக்குப் பணியாற்றவேண்டுமென்பதே தமிழ்நாட்டு கூட்டுறவுத் தொண்டர்களின் பிரார்த்தனை.

வாழ்க நேருஜி.

ஆக்க வேலைகள். Constructive work.

சில கூட்டுறவுக் குறிப்புகள்.

இந்தியா பூராவிலும் 1,35,708 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவைகளில் 89·45 லக்ஷம் அங்கத்தினர்கள் உள்ளனர். இவைகளின் தொழில்முதல் 166 கோடி ரூபாய்கள்.

பாகிஸ்தானில் பிரிவினைக்குப்பின்பு ஒருவருஷ காலமாகத்தான் கூட்டுறவு சங்கங்கள் வேலைசெய்ய ஆரம்பித்துள்ளன. 50,000 சங்கங்களில் 25லக்ஷம் அங்கத்தினர்கள் உள்ளனர். சங்கங்களின் வேலை மூல தனத்தின் பிதிப்பு ரூ. 50 கோடி.

1949 ஜூன் முடிய சென்னை மாகாணத்தில் 18,933 சங்கங்கள் இருந்தன. இவைகளின் அங்கத்தினர்கள் 25·38 லக்ஷம். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 807·08 லக்ஷம். மாகாண ஜனத் தொகையில் கால்பங்கு (24%) கூட்டுறவு சங்கங்களின் பயனை அடைந்து வருகிருர்கள். இந்தியாவில் மற்றெல்லா மாகாணங்களையும் விட சென்னை மாகாணத்தில்தான் கூட்டுறவு நன்கு வேரூன்றி பல துறைகளிலும் பாவியுள்ளது.

தஞ்சாவூர் கூட்டுறவு சிக்கன சங்கம் 18—7—48ல் வேலை துவக்கி 30—6—49க்குள் 139 அங்கத்தினர்களைச் சேர்த்துள்ளது. ஷை சங்கத்தில் 5 சேவிங்ஸ், 6 பிராவிடெண்டு, 139 சிக்கன டிபாசிட் கணக்குகள் உள்ளன. பிரதி மாதமும் ரூ. 600க்குமேல் வசூலாகிறது. சமீபத்தில், சங்கம், மெம்பர்களுக்கு அவர்கள் சேமிப்பு ஆதாவின் மேல் மாதம் 1க்கு ரூ. 1க்கு, 1பை வட்டிக்கு கடன்கள் கொடுக்கத் துவங்கியுள்ளது. கூடிய சீக்கிரம் சங்கத்தின் கிளைகள் தஞ்சாவூர் நகரின் முக்கிய பாகங்களில் ஏற்படுத்தப்படுமென்று கூறப்படுகிறது. சங்கம் ஏழை ஜனங்கள் சுலபமாகப் பணத்தைச் சேர்த்துவைக்க சிறந்த வகையில் உதவிவருவது போற்றத்தக்கது.

"சிக்கன சங்கத்தைச் சேர்ந்திடுவீர்
சீரிய பொன்பல சேர்த்திடுவீர்

இச்சகம் சொல்பவர் வார்த்தை நம்பி
இறைத்துப் பணத்தைப் பாழ்படுத்தி
பச்சைக்குழந்தைக்கும் பாலுமின்றி
பாரிலே வீணிலே வாழவேண்டாம்" (சிக்)

* * *

கழிவு உணவு தயாரித்தல்,

சென்னை மாகாணத்தில் 60 முனிசிபாலிடிகளும் 43 பஞ்சாயத்து போர்டுகளும் இதுவரை, குப்பை கழிவுகளை கம்போஸ்ட் (compost) முறையில் உரமாகத் தயாரித்து வருகின்றன. மேற்கொண்டு எல்லா

முனிசிபாலிட்டிகளேயும் பஞ்சாயத்து போர்டுகளேயும் அவ்விதமே செய்யும்படிக் கட்டாயப்படுத்தும்படி மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு உத்திரவிட்டுள்ளனர்.

மேற்படி திட்டம் கண்டிப்பாக நிறைவேற்றப்பட்டால் கிராமங்களின் சுகாதாரம் அபிவிருத்தியாவதுடன், எருவின் அதிக உற்பத்தியால் உணவுப் பஞ்சமும் சீக்கிரம் நீங்கும்.—ஆசிரியர்'

★ ★ ★

வினு விடை. Questions & Answers-

1. ரிஜிஸ்தரான ஒரு நாணய சங்கம் வேலே துவங்குவது எப்படி?

சங்கம் ரிஜிஸ்தரான தகவல் கிடைக்கப்பெற்றதும், மனுதார்கள் பிரதேச கூட்டுறவு யூனியனேக் கலந்து சங்கம் துவக்கும் தேதியை நிர்ணயித்து விளம்பரம் செய்யவேண்டும்.

சங்கம் துவங்கும் தேதியில் யூனியன் சார்பில் அதன் சூபர்வைசரும், மற்றும் ஒரு கவர்னிங் பாடி அங்கத்தினரும் ஆஜராயிருப்பார்கள். சங்கம் கோரிய மனுதார்களில் பத்துக்குக் குறையாத பேர்கள் கூடியிருக்கவேண்டும். ஊரிலுள்ள மற்றவர்களும் கூட்டத்திற்கு வரலாம்.

முதல் மனுதார்கள் கூட்டத்திற்கு தங்களுள் ஒருவரை தலேவராகத் தேறுவார்கள். பின்பு ரிஜிஸ்கிராரிடமிருந்து வரப்பெற்ற ரிஜிஸ்திரேஷன் சர்டிபிகேட்டும், ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கத்தின் பைலாவும் வாசித்து ரிகார்டு செய்யப்பட்டு சங்கத்தின் வேலே துவக்கலாமாகவும், ஆஜரில் உள்ள முதல் மனுதார் மெம்பர்கள் பங்குத்துகைகள் அங்கீகரிக்கப்படலாமாகவும் தீர்மானிக்கப்படும். அடுத்தபடியாக சங்கத்தின் முதல் பஞ்சாயத்தார்கள்'பெயர்கள் ரிகார்டு செய்யப்படுவதுடன் சங்கத்தை பிரதேச சூபர்வைசிங் யூனியனிலும், ஜில்லா மத்திய பாங்கிலும் அணேத்துக்கொள்ளலாமாகவும் தீர்மானம் செய்யப்படும். சம்பிரதாயமாக சங்கத்தை ரிஜிஸ்தர் செய்தும், துவக்கியும் உதவிய பல அதிகாரிகளுக்கும் நன்றி செலுத்தி தீர்மானங்கள் எழுதுவதுமுறை,

இந்த மகா சபைக் கூட்டத்திற்கு ஆஜராயுள்ள எல்லாமுதல் மனுதார்களிடமும் மீட்டிங் புஸ்தகத்தில் கையெழுத்து வாங்கி கடைசியாக மீட்டிங் தலேவர் கையெழுத்துச் செய்யவேண்டும்.

மகாசபைக் கூட்டம் முடிந்தபின், முன்சொன்ன பஞ்சாயத்தா கள் கூடி தங்களுக்குள் ஒரு பிரசிடெண்டு, காரியதரிசியை தே தெடுக்கவேண்டும். பின்பு அவர்கள் புதிதாகச் சேரவிரும்பும் அ கத்தினர்களைச் சேர்த்தும் சங்கம் துவக்க ஏற்பட்ட ஆரம்பச்சிலவுகள் யும், கணக்கு புஸ்தக சிலவுகளையும் அனுமதித்து தீர்மானம் செய் தும் இந்த பஞ்சாயத்து மீட்டிங்கை முடிக்கவேண்டும்.

கடைசியாக காரியதரிசி அன்றைய தேதி வசூல்களுக்கு ரசீ கள் போட்டு, வரவு செலவுகளை கணக்குப் புஸ்தகத்தில் எழுதி ரொக்க இருப்பை சங்க பிரசிடெண்டிடம் ஒப்புவித்து அவருடை கையெழுத்தை குறிப்பில் வாங்க வேண்டும்.

இவைகள்எல்லாம் செய்யப்பட்டதும் சங்கம் முறையாக துவக்க பட்டதாக கருதப்படும். சங்கம் துவக்கிய சில நாட்களுககுள் இந் முதல் மீட்டிங் தீர்மானங்களின் நகல் டிப்டி ரிஜிஸ்திரார், ஜில்ல பாங்கி, பிரதேச யூனியனுக்கு அனுப்பிவைக்கபடவேண்டும்.

2. எந்தக் காரியத்திற்கும் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்திக் கொ ளலாமா ?

கூட்டுறவு லக்ஷியங்களைக்கொண்ட காரியங்களுக்கு மட்டுமே கூட்டுறவுச்சட்டம் சங்கம் அமைக்க இடம் கொடுக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தினர்களுள் சிக்கனம், சுய உதவி பரஸ்பர சகாய ஆகியவைகளை வளர்க்க வேண்டும். அவைகளின் நிர்வாகம் கூட்டுறவு தத்துவஙகளுக்கு உகந்தபடி ஜனநாயக முறையில் சுரண்டல் தன்மை யற்றதாய் இருக்க வேண்டும். அதாவது ஒரு மெம்பருக்கு சங்க மக சபையில் ஒரு ஓட்டுதான் இருக்கும். தவிர அவர் பங்குத்துகைமீது லாபம் ஒரு அளவுக்குமேல் கொடுபடமாட்டாது.

இவ்வித சங்கங்கள், மெம்பர்கள் நாணயத்தேவையைப்பூர்த்தி செய்யவும் (Credit), அவர்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வைத்து விற்கவும் (Stores) தவிர மெம்பர்கள் சாமான்களை உற்பத்தி செய்து விற்கவும் (Production & Sale) ஏற்படுத்தப்படலாம். இவ் னும் மேற்சொன்ன காரியங்களில் உதவுவதற்கும் (Aiding) சங்கங் கள் ஏற்படுத்தப்படலாம்.

எப்படியும் சங்க வேலைகளின் பயனாக மெம்பர்களிடையே நல்ல உற்பத்தி, நல்ல வியாபாரம், நல்ல வாழ்க்கை இம்மூன்றும் விருத்தி யடையவேண்டும். இந்த லக்ஷியங்களைப் பூர்த்திசெய்யும் எந்த முயற்சியையும் கூட்டுறவுச் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யும்படி ரிஜிஸ் திராரைக் கோர மக்களுக்கு உரிமையுண்டு.

கூட்டுறவுத்தொண்டு வாசகர்களுக்கு ஒரு அறிவிப்பு.

இதுவரை கூட்டுறவுத் தொண்டை ஆதரித்து சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களுக்குச் சங்கம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

நாளது வரை சந்தாதாரராகச் சேராத வாசகர்கள் உடனே தங்கள் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கும்படி கோரப்படுகிறது. சந்தாவை அனுப்பிவைக்காமலும், பத்திரிகை வேண்டாம் என்று தெரிவிக்காமலும் இருப்பவர்களுக்கு 1950 ஜனவரி மாதம் முதல் வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

தஞ்சாவூர்,
—12—49.

K. ஸ்ரீனிவாசன்,
எடிட்டர், & பப்ளிஷர்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான ரப்பர் ஸ்டாம்புகள், 2 அல்லது 4 பிளாப் பாடுகள் (Pads) முதலியன சகாயமான விலைக்கு செய்து கொடுக்கப்படும். கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான புஸ்தகங்களும் ஆர்டர்கள்பேரில் தயாரித்துக் கொடுக்கப்படும். விவரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

T. M. கோவிந்தசாமி,
1425, போகி லெட்சுமிநாயகன் சந்து,
தெற்குவீதி, தஞ்சாவூர்.

Awarded Gold and Silver Medals
by
Rajas, Judges and Deputy Collectors.

நெ. 1 மைசூர் சந்தணக்கட்டையில் அறைத்த கலவைச் சந்தணம் 1சேர் 2 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையிலும், "ஓரியண்டல் பிளவர் டஸ்டு" முதலிய வாசனைத் திரவியங்கள் கிடைக்குமிடம்.

Estd 1888.

J. Gulam Mohamed, S/o M. Umersa Sahib
Ayyankadai Street, Tanjore.

Edited and published by K Srinivasan, M A, at Co-op buildings Tanjore. Printed by S. Shanmugam at Sri Rajarajeswari Press, South Main Street, Tanjore.